ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2109/11 - 2019 පෙබරවාරි මස 05 වැනි අඟහරුවාදා - 2019.02.05
*2109/11 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், தம்பதெனிஹத்பத்துவ சிறுபிரிவில், இல. 993, செரபிஸ்வத்த கிராம அலுவலர் பிரிவில், செரபிஸ்வத்த கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவை நாயகத்தினால் 2018.01.29 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட கேயு/பீஎல்ஜீ/ 2018/01 இலக்க ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களில் அமைந்துள்ள காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - செரபிஸ்வத்த - விஸ்தீரணம் : சுமார் 2.5721 ஹெக்டயார்**

வடக்கு : புகையிரத பாதையின் ஒதுக்கு நிலம் ; கிழக்கு : புகையிரத பாதையின் ஒதுக்கு நிலம் மற்றும் ஈதெல்ல ஜனபதய வரிமதிப்பீட்டு இல. 132 ஆம் இலக்கம் கொண்ட காணி ; தெற்கு : துண்டு பீ, காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் கைத்தொழில் அமைச்சு உரிமை கோரும் செரபிஸ்வத்த மற்றும் முதலீட்டுச் சபை உரிமை கோரும் காணி ; மேற்கு : முதலீட்டுச்சபை உரிமை கோரும் காணி.

02. **துண்டு 'பி' - செரபிஸ்வத்த - விஸ்தீரணம் : சுமார் 0.0488 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு ஏ மற்றும் ஈதெல்ல ஜனபதய வரிமதிப்பீட்டு இல. 132 ஆம் இலக்கம் கொண்ட காணி ; கிழக்கு : ஈதெல்ல ஜனபதய வரிமதிப்பீட்டு இல. 132 ஆம் இலக்கம் கொண்ட காணி ; தெற்கு : பாதை மற்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் கைத்தொழில் அமைச்சு உரிமை கோரும் செரபிஸ்வத்த ; மேற்கு : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் கைத்தொழில் அமைச்சு உரிமை கோரும் செரபிஸ்வத்த.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல. : 4-3/9/2017/டபிள்யூஎஸ்/504.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர"
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
2018.10.25

02-660

---

திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல. : 11/3/3/1/9ஏ/44.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின்
குறிப்பு இல. : எல்டீ/05/2007/எம்வீ/305 ஏ.

காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் 2011.12.13 ஆந் திகதிய 1736/22 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 4A தமிழ் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட துண்டு 'சீ' இனது விஸ்தீரணம் 0.4725 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனது விஸ்தீரணம் 2.4725 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எஸ். டீ. பீ. ஜயசூரிய,
பிரதேச செயலாளர்,
லக்கல-பல்லேகம.

பிரதேச செயலகம்,
லக்கல-பல்லேகம,
2019.01.31.

02-662


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.